REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)

6 PAGES பக்கம் 1

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 23 CLICK - 05

AUGUST 2026 ₹. 1

**நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!**

**- CVPA NNT**

# CVPA -ன் 29வது பொதுக்குழு கூடியது.





- **இனி இரண்டு வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடத்தி கொள்ள பொதுக்குழுவில் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேறியது**
- **இனி வரும் காலங்களில் பொதுக் குழுவையும் தேர்தலையும் தனித்தனியாக நடத்த பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேறியது**
- **CVPA NNT-ல் 60 வயதுக்கு மேற்பட்டோர் நிபந்தனையுடன் சேர்த்துக் கொள்ள பொதுக்குழுவில் தீர்மானம்**
- **மேலும் பல்வேறு முக்கிய தீர்மானங்களுக்கு பொதுக்குழு ஒப்புதல் அளித்தது**

நமது CVPA சங்கத்தின் 29ஆவது பொதுக்குழு கூட்டம், சென்னை சிந்தாதிரிப் பேட்டை முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மண்டபத்தில் 07.08.2026 அன்று நடைபெற்றது. காலை 9:00 மணி அளவில் வருகை பதிவேட்டுடன் பொதுக்குழு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்த் தாய் வாழ்த்துடன் மேடை நிகழ்ச்சிகள் தொடங்கியது. வட சென்னை துணைத்தலைவர் திரு.கௌவுஸ் பாட்ஷா அவர்கள் பொதுக்குழுவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினார். தென் சென்னை எஸ்1 துணைத் தலைவர் திரு.சீனிவாசன் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பொதுக்குழு கூட்டத்திற்கு CVPA தலைவர் திரு.புருஷோத்தமன் அவர்கள் தலைமை தாங்கினார்.நமது சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் திரு.யோகா அவர்கள் முன்னிலை வகித்தார். நமது சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், திரு.சுந்தர வடிவேலு அவர்கள், திரு.செல்.செல்வம் அவர்கள், திரு.சரவணன் அவர்கள், முன்னாள் பொருளாளர்கள் திரு.ஜெயபால் அவர்கள், திரு.ரவிக்குமார் அவர்கள், நமது சங்கத்தின் தலைமை தேர்தல் அதிகாரி லயன்.திரு. விஜயகுமார் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நமது சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் திரு. யோகா அவர்கள் பேசுகையில் தனது வயதை கருத்தில் கொண்டு தான் வகித்து வரும் CVPA-ன் கௌரவ துணைத் தலைவர் பதவியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதற்கு நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்கள் ஒரு காலமும் இதற்கு நாங்கள் யாரும் சம்மதிக்க மாட்டோம். தேவைப்பட்டால் சங்கத்தில் வெற்றிடமாக உள்ள கௌரவ தலைவர் பதவிக்கு உங்களை உயர்த்தி வைப்போம் என குறிப்பிட்டார். இது குறித்து ஆலோசனை செய்து விரைவில் முடிவை அறிவிப்போம் என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து நமது சங்கத்தின் செயலாளர் திரு.துரைபாபு அவர்கள், கடந்த ஓராண்டுகளாக அவர் செய்த பணிகளை செயலாளர் அறிக்கையாக தயாரித்து வழங்கினார். இவரது அறிக்கை பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு பிறகு ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு கணக்குகள் ஆடிட்டர் மூலம் தணிக்கை செய்யப்பட்ட பின்னர், அது பொருளாளர் அறிக்கையாக தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கையை நமது சங்கத்தின் பொருளாளர் திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்கள் பொதுக் குழுவில் சமர்ப்பித்தார். வரவு செலவு கணக்குகள் பொதுக்குழுவின் விவாதத்திற்கு பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் நமது சங்க பொருளாளர் திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்கள் ஒரு கருத்தை பொதுக்குழு முன் வைத்தார். CVPA பொருளாளராக தான் தொடர்வதாகவும் தன்னை CVPA NNT பொருளாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்குமாறும், தனது ஆடிட்டர் அறிவுரைப்படி இதை கூறுவதாகவும் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்து பேசிய நமது சங்கத் தலைவர் புருஷோத்தமன் அவர்கள் இதற்கான முடிவு வரும் செயற்குழுவில் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார். தேவைப்பட்டால் கௌரி பார்த்தசாரதி அவர்களின் பர்சனல் ஆடிட்டர் அவர்களிடம் பேசலாம் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பொது விவாதம் நடத்தப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு , தலைவர் ,செயலாளர், பொருளாளர் ஆகியோர் விளக்கம் அளித்தார்கள். குறிப்பாக CVPA NNT-ல் சில மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்று சைதாப்பேட்டை திரு..கண்ணன் அவர்கள் சில ஆலோசனைகள் வழங்கினார். இதை எல்லா பொதுக்குழு உறுப்பினர்களும் வரவேற்றனர். அதன் அடிப்படையில் CVPA NNT-ல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதே சமயம் புதிய உறுப்பினர்களாக இருந்தாலும், ரெனிவல் உறுப்பினராக இருந்தாலும் ஆயுட்கால உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து













2ம் பக்கம் பார்க்க....

ரெனிவலில் இருந்திருக்க வேண்டும்.ஆயுட்கால உறுப்பினர்கள் 2021 ஆண்டுக்கு முன்பு சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2027ஆம் ஆண்டிற்கான டைரி மற்றும் காலண்டர் விளம்பரம் வந்தால் மட்டுமே டைரி காலண்டரை வெளியிட வேண்டும். என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வரும் அக்டோபர் மாதம் நடைபெற இருக்கின்ற குடும்ப விழாவை தென் சென்னை எஸ்-1 சார்பாக எடுத்து நடத்துவதாக இப்பொதுக்குழு ஏக மனதாக அதை ஏற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

நமது சங்கத்தில் இது நாள் வரை PRO-ஆக செயல்பட்டு வந்த திரு.வே.பாலச்சந்தர் அவர்கள் தனது ராஜினாமா கடிதத்தை பொதுக்குழுவில் சமர்ப்பித்தார். இது தொடர்பாக பொது குழுவில் விவாதம் செய்யப்பட்ட பின்னர் அவரது ராஜினாமா கடிதம் குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை செயற்குழுவிற்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட 7 தீர்மானங்கள் பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு விடப்பட்டது.

- ★ பொதுக்குழு மற்றும் தேர்தல் தனி த்தனியே நடத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ★ இனி வரும் காலங்களில் ஒருவருக்கு ஒரு பதவி என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ★ CVPA செயற்குழு மற்றும் பொதுக்குழு பொறுப்பில் இருப்பவர்கள் மாநில சங்கத்தின் பொறுப்பிற்கு சென்றால் அடுத்து வரும் தேர்தலில் மூன்று ஆண்டுகள் தேர்தலில் நிற்க தடை விதிக்கப்படுகிறது.
- ★ இனி வரும் காலங்களில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த இரண்டு வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடத்திக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ★ ஏற்கனவே நிலுவையில் உள்ள பாக்கித் தொகையை வசூல் செய்ய ஒரு குழு அமைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ★ அந்த குழு வசூல் செய்து அறிக்கை தரும்போது சங்கப் பணத்தை முறைகேடாக பயன்படுத்தியது தெரியவந்தாலோ, பணம் கொடுத்த பிறகும் அவர் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் மறைத்தி ருந்தாலோ அதை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் சங்கத்தில் எந்த பொறுப்பிலும் இருந்திருந்தாலும் தேர்தலில் நிற்க தடை விதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ★ திரு விஜயகுமார் அவர்கள் நமது சங்கம் விடுத்த அறிவிப்புக்கு எதிராக செயல்பட்ட காரணத்தால் இந்த பொதுக்குழு வரை அவர் இடை நீக்கம் செய்யப்பட்டார். அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பொதுக்குழுவின் முடிவுக்கு விடப்பட்டது. அவர் இந்த பொதுக்குழுவில் நேரில் வர முடியாத காரணத்தால் சங்க செயலாளர் துரைபாபு அவர்களிடம் பொதுக்குழு எடுக்கும் முடிவுக்கு தான் கட்டுப்படுவதாக கூறிவிட்டார். இதனை ஏற்றுக் கொண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அவர் மீது எடுத்த இந்த நடவடிக்கையே பொதுவானது. அவர் மீது எடுக்கப்பட்ட இடை நீக்கம் இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேசமயம் இனி வரும் காலங்களில் நமது சங்கம் எடுக்கும் முடிவுக்கு அவர் கட்டுப்படாமல் நடந்து கொண்டால் CVPA-ன் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து அவரை நீக்கும் அதிகாரத்தை பொதுக்குழு நிர்வாக குழுவிற்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக பொதுக்குழுவில் கலந்து கொண்ட திரு.ஸ்டில்ஸ் ரவி அவர்கள், தென்னிந்திய திரைப்பட போட்டோகிராபர் அசோசியன் செயலாளர் திரு.ராஜா அவர்கள், மற்றும் திரு. ரமேஷ் அவர்கள்,திரு.முரளி அவர்கள், திரு.கண்ணன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மாநில சங்கம் சார்பாக CVPA-க்கு வரவேண்டிய பங்குத்தொகை 29வது பொதுக்குழு நடந்து கொண்டிருந்தபோது CVPA வங்கிக் கணக்கில்,மாநில சங்கம் வரவு வைத்தது. இதற்கு பொதுக்குழுவில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொதுக்குழு ஏற்பாடுகள் சிறப்பான முறையில் செய்யப்பட்டன. சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பணியை சிறப்புடன் செய்து முடித்தனர்.

முன்னதாக மறைந்த நமது சங்க உறுப்பினர்களின் திரு உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**அசைவ உணவு ஏற்பாடு : திரு. B. கமலக்கண்ணன்** அவர்கள், நேத்ரா கேட்டரிங். பட்டாளம்

**LED DISPLAY ஏற்பாடு:** வடபழனி பகுதி செயலாளர் **திரு.KK. நெடுஞ்சேரலாதன் @ சேரன்** அவர்கள்

**LIVE STREAMING ஏற்பாடு:** புரசைவாக்கம் பகுதி செயலாளர் **திரு.ஷேடோ லோகநாதன்** அவர்கள்

**வீடியோ கவரேஜ் ஏற்பாடு:** மத்திய சென்னை துணைத் தலைவர் **திரு.வேல்முருகன்** அவர்கள்

**போட்டோகிராபி ஏற்பாடு:** சூளை பகுதி செயலாளர் **திரு.சதீஷ்** அவர்கள்

**மண்டபம் ஆன்லைன் புக்கிங் ஏற்பாடு:** அயனாவரம் பகுதி செயலாளர் **திரு.ரகு அவர்கள்**

இவர்கள் அனைவருக்கும் பொதுக்குழுவில் நன்றி தெரிவிக்கப்பட்டது. தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.



CVPA அலுவலகத்தில் 80ஆவது சுதந்திர தின நிகழ்ச்சி(15.08.2026) வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. தமிழ் தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில், நமது சங்க செயலாளர் தேசிய கொடியை ஏற்றினார். தேசிய கீதம் பாடிய பின், நமது சங்கத் தலைவர் புருஷோத்தமன் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். இந்நாள்-முன்னாள் நிர்வாகிகள் - பகுதி செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



187வது உலக புகைப்பட தினத்தை (19.08.2026) கொண்டாடும் வகையில் நமது சங்க அலுவலகத்தில் CVPA நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கேக் வெட்டி கொண்டாடிய தருணம்



மத்திய சென்னை பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (AI) குறித்து பயிற்சி வகுப்புக்கு நமதுசங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பயிற்சி வகுப்பை தற்போது செயற்கை நுண்ணறிவு குறித்து புகழ்பெற்று விளங்கும் வேலைக்காரன் திரு.செந்தில் அவர்கள் நடத்தினார்.இந்த பயிற்சி வகுப்பில் மத்திய சென்னையை சேர்ந்த CVPA உறுப்பினர்கள் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்த CVPA நிர்வாகிகளை அனைவரும் பாராட்டினார்கள்.



13.08.2026 அன்று CVPA தென் சென்னை பகுதி எஸ்-1 சார்பாக வேலைக்காரன் செந்தில் அவர்களின் செயற்கை நுண்ணறிவு (AI) பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இன்றைய நவீன யுக மாற்றத்தில் ஒளிப்படத் துறையில் செயற்கை நுன்னறிவால் நிகழப் போகும் ஆச்சரியங்கள் குறித்து நல்ல விளக்கங்களை சிறப்பாக எடுத்து கூறிய வேலைக்காரன் செந்தில் அவர்களை அனைவரும் பாராட்டினர். தென் சென்னை எஸ்1 பகுதியை சேர்ந்த ஏராளமான உறுப்பினர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.இந்த பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்த CVPA நிர்வாகிகளை அனைவரும் பாராட்டினார்கள்.



நமது சங்கம் உறுப்பினர்கள் அனைவரும் பயன் அடையும் வகையில் சங்க நிர்வாகிகளின் வழிகாட்டுதலின்படி தென் சென்னை எஸ்2 பகுதியில் (14.08.2026) நடைபெற்ற (AI) செயற்கை நுண்ணறிவு பயிற்சி வகுப்பில் நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். வேலைக்காரன் செந்தில் அவர்கள் நடத்திய இந்த பயிற்சி வகுப்பு, சங்க நிர்வாகிகள் முன்னிலையில் குரோம்பேட்டை பகுதியில் தென் சென்னை எஸ்2 சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.




தென் சென்னை எஸ்-2 மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர்களுக்கு நிக்கான் நிறுவனத்தின் சார்பில் வெட்டிங் சினிமாட்டிக் இன் போட்டோகிராபி வீடியோகிராபி பயிற்சி வகுப்பை நிக்கான் நிறுவனத்தின் திரு பிரபு மோகன் அவர்கள்(11.08.2026) நடத்தினார். இந்த நிகழ்ச்சி நமது சங்க நிர்வாகிகள் முன்னிலையில், ஸ்ரீ சாய்ராம் மஹால், தில்லை கங்கா நகர் நங்கநல்லூரில் நடைபெற்றது.



வடசென்னை, திருவெற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினரும்,திருவெற்றியூர் பகுதியின் முன்னாள் செயலாளருமாகிய திரு.மேகநாதன் - திருமதி.பவானி இவர்களின் மகள் செல்வி.ஸ்ரீநிஷாவிற்கு நடைபெற்ற மஞ்சள் நீராட்டு விழா (16.08.2026) நிகழ்ச்சியில்,நமது சங்கம் சார்பாக நிர்வாக குழு -செயற் குழு உறுப்பினர்கள்,மற்றும் நண்பர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர், ராஜம் ஸ்டில்ஸ் உரிமையாளருமாகிய, திரு.NJS.கிருபானந்தம் அவர்களின் மகன் K.டான் பேட்ரிக்-V.மார்கரெட் இவ் ஆகிய இருவருடைய திருமண வரவேற்பு விழாவில் (29.09.2026) நமது சங்கம் சார்பாக நிர்வாக குழு - செயற்குழு,மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினரும், தேவி பிரியா ஸ்டுடியோ உரிமையாளருமான, திரு.N.D.மணிகண்டன் @ வினோத் - திருமதி. ரம்யா அவர்களின் மகன் N.M.யுவனேஷ் -ன் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழாவில்(04.08.2026) நமது சங்கம் சார்பாக நிர்வாக குழு- செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் வருகை தந்து குழந்தையை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினரும், உசேன் போட்டோஸ் உரிமையாளருமான, திரு.H.உசேன் மற்றும் ஜக்கியா உசைன் இவர்களின் மகன்கள் அயான் ஹஸ்னேன்-ரிஹான் உசேனின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா மற்றும் காஜ் விழாவும் (11.08.26) நடைபெற்றது. இந்த விழாவில் நமது சங்கம் சார்பாக நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் வருகை தந்து குழந்தைகளை வாழ்த்தினார்கள்.



வடசென்னை பகுதி வண்ணாரப்பேட்டையை சேர்ந்த நமது சங்க உறுப்பினர், ஹேப்பி வீடியோ திரு.சீனிவாசன்-திருமதி அன்னலட்சுமி இவர்களின் மகன் சபரிவாசன்-சக்திரம்யா ஆகிய இருவருக்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு (22.08.2026) நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பில் , சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள்- பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

## CVPA இணையதளம் இப்போது புதிய வடிவமைப்புடன் நிறைய மாற்றங்கள் செய்து வெளியிடப்பட்டுள்ளது

சென்னை வீடியோ புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பயன் அடையும் வகையில் (CVPA) இணையதளம் இப்போது புதிய வடிவமைப்புடன் (Redesigned) மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

★ அதிவேகமான மற்றும் மொபைல் போன்களுக்கு ஏற்ற வசதியான தளமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

★ இணையம் (Online) வழியாக ★ உறுப்பினர் சந்தாவை செலுத்தி அடையாள அட்டையை புதுப்பிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

★ Member Dashboard ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தனிப்பட்ட விவரங்களை நிர்வகிக்கவும், வாரிசுதாரர் (Nominee) விவரங்களைப் புதுப்பிக்கவும் முடியும்.

திருத்தம் மற்றும் புதுப்பித்தல் வசதி உறுப்பினர்களே நேரடியாக நமது இணையதளத்திற்கு சென்று திருத்தம் செய்யும் வசதி.

இனி ஒவ்வொரு உறுப்பினரும் உள்நுழைந்து (Login), தங்கள் தொழில் சார்ந்த விவரங்களை - அதாவது சுயவிவரம் (Profile), சேவைகள், தொடர்பு விவரங்கள் மற்றும் சுயவிவரப் புகைப்படம் ஆகியவற்றை உடனடியாகப் புதுப்பிக்கலாம்.

CVPA அடையாள அட்டையை (CVPA Identity Card ) டிஜிட்டல் முறையில் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளலாம்.

உறுப்பினர்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத் திற்காகப் புதிதாக *M2M Concept (Member & to & Member) வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர் உள்நுழைவிற்கு ‘பயோமெட்ரிக் கைரேகை’ Biometric Fingerprint வசதியும் உள்ளது.

தற்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ள இணையதளத்தை நமது சங்க உறுபினர்கள் உடனடியாக பார்வையிடமாறு www.cvpa.in கேட்டுக் கொள்ளப்படுகிறது

மேலும் விவரங்களுக்கு 9282264723, 78240 34734 என்ற எண்ணில் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## செயற்குழு தீர்மானங்கள்

19.08.2026 அன்று நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தலைமை தாங்கினார். செயற்குழு கூட்டத்தில் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

.PRO திரு பாலச்சந்தர் அவர்களுக்கு, அவரது ராஜினாமா கடிதம் குறித்து, ஒரு சுமூகமான முடிவு எடுக்க அவருக்கு செயற்குழு கூட்டத்தில். கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.ஆனால் அவர் எடுத்த முடிவில் உறுதியாக இருந்த காரணத்தால் அவரது ராஜினாமா கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொருளாளர் திருமதி கௌரி பார்த்தசாரதி அவர்கள CVPA NNT - பொருளாளர் பொறுப்பில் இருந்து . தன்னை விடுவிக்குமாறு பொதுக்குழுவில் கேட்டுக்கொண்டதை செயற்குழு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. தொலைபேசி வாயிலாகவும் நேராகவும் CVPA NNT குறித்து சங்க செயலாளர் அளித்த விளக்கங்களை அவர் ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை. குறிப்பாக CVPA NNT ஒரு அறக்கட்டளை அமைப்பல்ல இது CVPA வின் ஒரு அங்கம்தான் என்பதை அவர் ஏற்க மறுக்கிறார். அவருக்கு மேலும் அவகாசம் வழங்கும் வகையில் CVPA NNT பொருளாளர் பதவியில் அவர் தொடர்வார் என்று ஏக மனதாக செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

CVPA-ல் பாக்கி தொகையை வசூலிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழு வசூல் தொகையை வசூலித்த பிறகு தரும் அறிக்கை குறித்து பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19.08.2026 அன்று செயற்குழு முடிந்த பிறகு உலக புகைப்பட தினம் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

வரும் CVPA சங்கம் குடும்ப விழாவை தென் சென்னை எஸ்1 சார்பாக நடத்துவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தென் சென்னை S1, தேனாம்பேட்டை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினரும், தேனாம்பேட்டை பகுதி செயலாளருமாகிய திரு.T.M.ரவி @ சங்கர்- திருச்சடை தம்பதியினர் புதியதாக புழுதிவாக்கம், ராம் நகரில் கட்டியுள்ள இல்லத்தின் (23.08.2026) புதுமனை புகுவிழாவில், CVPA சார்பாக சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.




## CVPA NNT குடும்ப நல பாதுகாப்பு நிதி 87,200 ரூபாய் ஆதம்பாக்கம் கிருஷ்ணமூர்த்தி குடும்பத்திற்கு வழங்கப்பட்டது



நமது சங்கத்தின் மகத்தான திட்டமாக அனைவராலும் போற்றப்படும் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் (CVPANNT நிதி) கீழ் மறைந்த நமது சங்க உறுப்பினரும், CVPA NNT-ன் பங்களிப்பாளருமான ஆதம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குடும்ப வாரிசுகளிடம் CVPA NNT நிதி 87,200 ரூபாய்க்கான காசோலையை சங்க நிர்வாகிகள் வழங்கினார். முன்னதாக அவரது திருவுருவ படத்திற்கு சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.






நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் காலம் சென்ற திரு.கார்மல் நேவிஸ் குமார் அவர்களுக்கு நடைபெற்ற நினைவுத் திருப்பலி மற்றும் அஞ்சலி நிகழ்வில் நமது சங்கம் சார்பாக நிர்வாகிகள் - செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351